**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : வான்மதி**

**நாள்: 27.07.2024 நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

வளர்ச்சி அடைந்த பாரதம் என்பது ஒவ்வொரு இந்தியரின் லட்சியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை ஆகாஷ்வாணியில், மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் நாட்டு மக்களுடன் உரையாற்ற உள்ளார்.

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், 12 கோடியே 34 லட்சம் குடும்பங்களை சேர்ந்த 55 கோடி பேருக்கு இலவச காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

முன்னாள் குடியரசு தலைவரும், புகழ் பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் ஏபிஜே அப்துல் கலாமின் 9 ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

*நிதிஆயோக்* 1 (18)

வளர்ச்சி அடைந்த பாரதம் என்பது ஒவ்வொரு இந்தியரின் லட்சியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் 9 ஆவது குழு கூட்டத்தில் பங்கேற்று பேசினார். மாநிலங்கள் மக்களுடன் நேரடியாக இணைந்திருப்பதால், வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை அடைய மாநிலங்கள் செயலில் பங்கு வகிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த வாய்ப்புகளை இந்தியா பயன்படுத்திக் கொண்டு சர்வதேச முதலீடுகளுக்கு உகந்த கொள்கைகளை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். நாடு சரியான திசையில் சென்றுக் கொண்டிருக்கிறது என்றும், 100 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும்

தொற்று நோயை அது தோற்கடித்து உள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இளைஞர்கள் திறமையான மற்றும் வேலை வாய்ப்புள்ள பணியாளர்களாக உருவாக்குவதே இதன் நோக்கம் என்று பிரதமர் தெரிவித்தார். இந்த கூட்டத்தில் நாட்டை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட உள்ளது. மேலும், வளர்ச்சி அடைந்த பாரம் என்ற லட்சியத்தை எட்டும் வகையில், மாநில அரசுகளின் பங்கு மற்றும் அதன் நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைக்கப்படுகிறது. வரும் 2047 ஆம் ஆண்டில் 30 கோடி

நிதிஆயோக் 2 (9)

அமெரிக்க டாலர் பொருளாதாரத்தின் இலக்கை அடையும் நோக்கு மற்றும் உலகின் 3 ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் லட்சியத்தை அடைவதற்கான நடவடிக்கைகள் ஆகியவை குறித்தும் கூட்டத்தில் ஆலோசிக்கப் படுகிறது. குடியரசு தலைவர் மாளிகையில் அமைந்துள்ள

கலாச்சார மையத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தின் முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் துணை நிலை ஆளுநர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், நிதி ஆயோக்கின் துணை தலைவர் திரு சுமன் பெரி மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மோடி (17)

மத்திய அரசின் 2024 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டின் அம்சங்கள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி நமோ செயலியில் பகிர்ந்துள்ளார். இது குறித்து அவர் தமது எக்ஸ் தள பதிவில், புதிய வேலை வாய்ப்பு மற்றும் இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்கான புதிய முன்னெடுப்புகள் சார்ந்த பல்வேறு திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டி உள்ளார். புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி தொழில் துறையை பலப்படுத்துவதுடன் ஊக்கத் தொகையுடன் கூடிய வேலை வாய்ப்பு திட்டங்களை உருவாக்குவதற்கு

பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். கல்வி, வேலை வாய்ப்பு, திறன் மேம்பாடு போன்றவற்றிற்கு 1.48 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும், முக்கியத்துவம் வாய்ந்த இந்த துறைகளை மேம்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் சமர்பிக்கப்பட்ட மத்திய அரசின் பட்ஜெட்டில் புதிய இன்டன்ஷிப் திட்டம், 5 ஆண்டு காலத்தில் 4 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளிட்டவற்ற கொண்டதாக உள்ளது என்று மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

*மன் கீ பாத்* (12)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுடன் கலந்துரையாடும் மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சியின், 112 ஆவது அத்தியாயம் நாளை ஒலிபரப்பாக உள்ளது. நாட்டு

மக்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் இந்த நிகழ்ச்சி கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக 112 ஆவது அத்தியாயம் நாளை காலை 11 மணிக்கு அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாகிறது. இது 3 ஆவது முறையாக நரேந்திர மோடி பிரதமராக பொறுப்பேற்ற பிறகு ஒலிபரப்பாகும் இரண்டாவது அத்தியாயமாகும். இந்த நிகழ்ச்சி அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன், வானொலியின் அனைத்து யூ டியூப் அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. இந்த நிகழ்ச்சி ஆகாஷ்வாணியில் இந்தி ஒலிபரப்பை தொடர்ந்து, அதன் தமிழாக்கம் ஒலிபரப்பாக உள்ளது.

*ஆயுஷ்மான் பாரத்* (12)

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், 12 கோடியே 34 லட்சம் குடும்பங்களை சேர்ந்த 55 கோடி பேருக்கு இலவச காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளதாக மத்திய அரசு

தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்து பேசிய மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் எழுத்துபூர்வமாக அளித்துள்ள பதிலில் இவ்வாறு தெரிவித்துள்ளார். 70 வயதை கடந்த அனைவருக்கும் இலவச மருத்துவ காப்பீடு திட்டத்தை நீட்டிப்பது தொடர்பாக வல்லுனர் குழு ஏதும் அமைக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆயுஷ்மான் திட்டத்தில் பயனாளிகளுக்கு தரமான சேவை வழங்கும் வகையிலும், காப்பீட்டு கோரிக்கைகளை துரிதமாக பரிசீலிக்கும் வகையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜெய்சங்கர் (10)

லாவோஸ் சென்றுள்ள மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று வியன்டியானில் நடைபெற்ற 14 ஆவது கிழக்காசிய மாநாட்டின் வெளியுறவு

அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்று பேசினார். ஆசியான் நாடுகள் இடையே அரசியல் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய விஷயம் என்று கூறினார். ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டின் ஒரு பகுதியாக டாக்டர் ஜெய்சங்கர் தென்கொரியா, சிங்கப்பூர் மலேசியா மற்றும் வியட்நாம் நாடடின் வெளியுறவு அமைச்சர்களையும் சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின் போது அந்த நாடுகளுடன் இந்தியாவின் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

தன்கர் (7)

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் இன்று புதுடெல்லியில் உள்ள யமுனை நதிக்கரை ஓரம் அமைந்துள்ள அசிட்டா பூங்காவில் அன்னையின் பெயரால் மரம் வளர்ப்போம் திட்டத்தின் கீழ், தனது தாயார் கேசரி தேவியின் நினைவாக மரக்கன்றுகளை நட்டார். உலக சுற்றுச்சூழல் தினத்தை ஒட்டி,

கடந்த மாதம் பிரதமர் திரு நரேந்திர மோடியால் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் ஒவ்வொரு தாய்க்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒரு மரத்தை நடுவதை நோக்கமாக கொண்டுள்ளது.

*வருமான வரி தாக்கல்* (7)

நாட்டில் 26 ஆம் தேதி வரை 5 கோடிக்கும் அதிகமானோர் வரி தாக்கல் செய்துள்ளதாக வருமான வரித் துறை தெரிவித்துள்ளது. இது கடந்த ஆண்டை காட்டிலும் அதிகமாகும். வரும் 31 ஆம் தேதி வரை வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்யாதோர் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு வருமான வரித் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

*மத்திய ரிசர்வ் பாதுகாப்பு படை* (12)

மத்திய ரிசர்வ் பாதுகாப்பு படையினரின் அர்ப்பணிப்பு, அவர்களின் சேவை போன்றவை குறித்து நாடு பெருமிதம் கொள்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மத்திய ரிசர்வ் பாதுகாப்பு படையின் 86 ஆவது நிறுவன தினத்தை ஒட்டி, அவர் இன்று வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், தேசத்தை பாதுகாப்பதில் துணிச்சலுடனும், தீர்க்கத்துடனும் மிகுந்த சேவையாற்றுவதில் பாதுகாப்பு படையினர் முதன்மையாக திகழ்வதாக புகழாரம் சூட்டி உள்ளார். இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா விடுத்துள்ள செய்தியில், ரிசர்வ் பாதுகாப்பு படை உருவாக்கப்பட்ட நாளில் இருந்து தேச பாதுகாப்பையே உயிர் மூச்சாக கொண்டு செயலாற்றி வருவதாக கூறினார். இந்நாளில் மத்திய ரிசர்வ் பாதுகாப்பு படையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு அவர் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

*சிராக் பாஸ்வான்* (8)

உணவு கலப்படம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு சிராக் பாஸ்வான் தெரிவித்துள்ளார். மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்து பேசிய அவர், உணவு பொருட்கள் கலப்படத்தை தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக கூறினார். இது தொடர்பாக இந்திய உணவு பாதுகாப்பு ஆணையம் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும், கலப்படத்தை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

*கலாம்* (12)

முன்னாள் குடியரசு தலைவரும், புகழ் பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் ஏபிஜே அப்துல் கலாமின் 9 ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. இந்தியாவின்

ஏவுகணை நாயகன் என அழைக்கப்படும் டாக்டர் அப்துல் கலாம் 2015 ஆம் ஆண்டு இந்நாளில் காலமானார். மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, டாக்டர் கலாம் குறித்து விடுத்துள்ள செய்தியில், டாக்டர் கலாமின் வாழ்க்கை கடின உழைப்பு, எளிமை உள்ளிட்ட பண்புகளால் மக்களை பெரிதும் கவர்ந்த கலாமின் நினைவுகள் எதிர்கால சந்ததியினரை வழிநடத்தும் என குறிப்பிட்டுள்ளார். மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், உலக அரங்கில் நமது தேசத்தின் திறனை முன்னெடுத்து சென்ற அறிவியலாளராக அப்துல் கலாம் திகழ்ந்தார் என குறிப்பிட்டுள்ளார்.

*மாஸ்டர் மதன்* (9)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாஸ்டர் மதனின் மறைவு மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது என பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக

அவர் சமூக ஊடக எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், அவரது சமூக சேவை முயற்சிகளுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் உழைத்தவர் என்றும், தமிழகத்தில பாரதிய ஜனதா கட்சியை வலுப்படுத்துவதற்கு அவர் அரும்பாடுபட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார். அவரது குடும்பத்தனருக்கும், அவரை பின்பற்றுபவர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

*பாஜக கூட்டம்* (7)

பாரதிய ஜனதா ஆளும் மாநில முதல்வர்கள் கூட்டம் புதுடெல்லியில் இன்று மாலை நடைபெற உள்ளது. கட்சி தலைமையகத்தில் நடைபெறும் இந்த கூட்டத்தில், அக்கட்சியின் மூத்த தலைவர்கள் கலந்து கொள்கின்றனர். மக்களவை தேர்தல் முடிந்த பிறகும், மத்திய பட்ஜெட் தாக்கல் செய்த பிறகும் முதல் முறையாக இக் கூட்டம் நடைபெறுகிறது. இக் கூட்டத்தில், மத்திய அரசின் திட்டங்கள், மாநில அரசுகளின் கருத்துக்கள்

மற்றும் இதர விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

வளர்ச்சி அடைந்த பாரதம் என்பது ஒவ்வொரு இந்தியரின் லட்சியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை ஆகாஷ்வாணியில், மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் நாட்டு மக்களுடன் உரையாற்ற உள்ளார்.

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், 12 கோடியே 34 லட்சம் குடும்பங்களை சேர்ந்த 55 கோடி பேருக்கு இலவச காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

முன்னாள் குடியரசு தலைவரும், புகழ் பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் ஏபிஜே அப்துல் கலாமின் 9 ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.